1972 நவம்பர் 14]

இரண்டாகப் பிரிக்கப்பட்ட பாடமுறைகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்களில் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பாடமுறைகளைக் (Bifurcated Courses) கைவிடுவதற்கான செயற்குறிப்பு ஏதும் (அரசிடம்) உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, இந்தமாதிரி கல்வி நிலையங்களை வாரியம் Board ஆக்குவதற்கு அரசாங்கம் ஏதேனும் திட்டம் வகுத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

Working hours in the Educational Institutions

* 294 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the protest of the teaching staff of the Secondary Grade Educational Institutions against the increase in the working hours; and

(*b*) if so, the action taken thereon?

பள்ளிகளில் வேலை நேரம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேலை நேரத்தை உயர்த்துவதற்கு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் எதிர்ப்பு தெரிவித்தது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது?

[1972 நவம்பர் 14

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளிகள் ஆண்டொன்றுக்கு வேலை செய்யவேண்டிய நாட்களின் எண்ணிக்கை, நாளொன்றுக்கு வேலை செய்ய வேண்டிய கால அளவு ஆகியவை பழைய பாடத்திட்டத்தில் இருந்தது போலவே புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னரும் இருந்து வரலாம் என அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இதன்படி ஒவ்வொரு ஆண்டும் எத்தனை நாட்கள் வேலை செய்ய வேண்டும், எத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆண்டு ஒன்றுக்கு துவக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும், உயர் தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும் 220 நாட்கள்—தேர்வு நடைபெறுகின்ற நாட்கள் உள்பட—இருக்க வேண்டுமென்றும், உயர்நிலைப் பள்ளிகளில் தேர்வு நடைபெறுகிற நாட்கள் உள்பட 200 நாட்கள் வேலை செய்ய வேண்டுமென்றும் இருந்தது. இந்தப் புதிய பாடத் திட்டத்தை வகுத்தவர்கள், தேர்வு நாட்களை நீக்கி 200 நாட்கள் உயர்நிலைப் பள்ளிகள் வேலை செய்வதன் மூலமும் தேர்வு நாட்களை நீக்கி உயர் துவக்கப் பள்ளிகள் 220 நாட்கள் வேலை செய்வதன் மூலமும் புதிய பாடத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரலாம் என்று யோசனை சொன்னார்கள். அதைப்பற்றி ஆசிரியர்களோடு கலந்து பேசியதில், அவர்கள் நாட்களைக் கூடுதலாக்க விருப்பம் தெரிவிக்கவில்லை. பிறகு இந்த 200 நாட்களிலேயே, ஏற்கெனவே இருக்கிற அதே நேரத்தில், அதே நாட்களிலே, புதிய பாடத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியும் என்று அவர்கள் உறுதி அளித்ததன்பேரில், அந்த முறை பின்பற்றப் பட்டிருக்கிறது.

(Thiru M. Rajah Iyer rose).

MR. CHAIRMAN : This is question 294. What does the hon. Member want? Does he want to put any supplementary?

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, இந்தப் புதிய பாடத்திட்டத்தை வகுத்தவர்கள் அப்படிப்பட்ட உறுதி அளித்தார்களா அல்லது ஆசிரியர் பிரதிநிதிகள் அந்த உறுதியை அளித்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த பாடத்திட்டத்தை வகுத்தவர்கள் பள்ளிக்கூட நாட்களைக் கூடுதலாக்கினால் நல்லது என்று தெரிவித்தார்கள். ஆனால், ஆசிரியர் பிரதிநிதிகளைக்

1972 நவம்பர் 14]

கூப்பிட்டுப் பேசும்போது, இப்போதுள்ள பள்ளி நாட்களுக்குள்ளேயே சொல்லிக் கொடுக்க முடியும் என்றும் ஆதலால் பள்ளி நாட்களை அதிகப்படுத்த வேண்டாம் என்றும் சொன்னார்கள். அதன்படி அதே வேலை நாட்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, இந்த வேலை நாட்களைப் பொறுத்தவரை தனியார் பள்ளிகளும் அரசுப் பள்ளிகளும் வெவ்வேறு வேலை நாட்கள் எண்ணிக்கையை வைத்துக்கொண்டிருக்கின்றனவா? எல்லாப் பள்ளிகளும் ஒருமிக்க இத்தனை நாட்கள் தான் வேலை செய்ய வேண்டும் என்று உத்தரவிடும் யோசனை இருக்கிறதா? அல்லா உயர்நிலைப் பள்ளிகளும் ஒரே நாளில் திறக்கப்பட்டு ஒரே நாளில் மூடப்பட வேண்டும் என்று ஆணையிட அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பள்ளி வேலை நாட்களைப் பொறுத்தவரை, எல்லாப் பள்ளிகளுக்கும் ஒரே அளவில் நாட்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பள்ளியை ஆரம்பிப்பது, பள்ளியை முடிப்பது ஆகியவைகளில் அந்தந்தப் பள்ளிகளின் சௌகரியத்தைப் பொருத்து அந்த நாட்களை நிர்ணயிக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, பாடத்திட்டக் குழுவில் இருந்த ஆசிரியப் பிரதிநிதிகள், இந்தப் பாடத்திட்டத்தை வகுக்கும்போதே, இந்தக் கால அளவிற்குள் இதைச் சொல்லிக்கொடுக்க முடியும் என்ற அளவில் அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படி அவர்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் அந்தக் குழுவின் முடிவு என்று பார்க்கும்போது, நாட்களை அதிகப்படுத்தினால் நல்லது என்று தான் முடிவு எடுத்திருக்கிறது. ஒரு குழுவில் பலர் இருக்கிறார்கள்; ஒரு சிலர் ஒரு கருத்தையும் மற்ற சிலர் வேறொரு கருத்தையும் கூறுவார்கள். குழுவின் முடிவு எது என்று பார்த்து, அதன்படி தான் நடக்க முடியும். பிறகு ஆசிரியப் பிரதிநிதிகளை அழைத்து விவாதித்தபோது, அவர்கள் வேலை நாட்களை அதிகப்படுத்துவதற்கு இணங்காத காரணத்தால், இப்போது உள்ள வேலை நாட்களிலேயே இந்தப் புதிய பாடத்திட்டத்தின்படி நடத்தி முடிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, இந்த ஆண்டில் பல ஆரம்ப, உயர்நிலைப் பள்ளிகள் பல நாட்கள் மூடப்பட்டு விட்டன. அதன் காரணமாக வேலை நாட்கள் பாதிக்கப்படுவதால், மேற்கொண்டு வேலை நாட்கள் அதிகப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக, எவ்வளவு நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அவ்வளவு நாட்கள் வேலை நாட்களாக ஆக்கிய பிறகு தான் இந்த ஆண்டு இறுதித் தேர்வுகள் மற்றவைகள் எல்லாம் நடத்தப் பட வேண்டும். ஆண்டு ஆரம்பத்திலே எத்தனை நாட்கள் விடுமுறை விடப்பட்டாலும், ஆண்டு இறுதிக்குள்ளாக மற்ற விடுமுறைநாட்களை வேலைநாட்களாக ஆக்கி, 220 அல்லது 200 நாட்கள் வேலைநாட்களாக ஆனபிறகு தான், ஆண்டு இறுதித் தேர்வுகள் நடத்துகிற சூழ்நிலை ஏற்படுத்தப்படும்.

THIRU A. R. DAMODARAN: May I then take it, Sir, that if the Schools are closed for 30 days because of certain disturbances, the S.S.L.C. Examination will also be postponed by 30 days to make up the number of working days?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, வேலை நாட்கள் பின்னாலே சரிக்கட்டப்பட்டுவிடும். இப்போது சில நாட்கள் மூடப் பட்டாலும், கடைசியில் கணக்கிடும்போது, 200 அல்லது 220 நாட்கள் பள்ளிகள் பணிபுரிந்திருக்க வேண்டும். வேலை நாட்கள் எண்ணிக்கை அவ்வளவு வராத நிலையில், மார்ச்சு மாதத்திலே நடக்கிற தேர்வை ஏப்ரல் மாதத்திற்குத் தள்ளிப்போடுகிற அளவில், அந்த அளவுக்கு வேலை நாட்கள் சரிக்கட்டப்படுகிற சூழ்நிலை ஏற்படும்.

Yoga Asanas for students

*295 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there are proposals to educate the students in High Schools in Yoga Asanas; and

(b) if so, the details thereof?

மாணவர்களுக்கு யோகாசனப் பயிற்சி

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு யோகாசனம் பயிற்றுவிக்கும் செயற்குறிப்புகள் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?